ஜெம்ஸ் சத்தம்

Since 1972

ஆகஸ்ட் ௨௦௨௧

நான்
உங்களுக்குச்
சொல்லுகிறேன்;
உங்கள்
சத்துருக்களைச்
சிநேகியுங்கள்;
உங்களைச்
சபிக்கிறவர்களை
ஆசீர்வதியுங்கள்;
உங்களைப்
பகைக்கிறவர்களுக்கு
நன்மை செய்யுங்கள்;
உங்களை
நிந்திக்கிறவர்களுக்காகவும்
உங்களைத்
துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும்
ஜெபம்பண்ணுங்கள்.

மத்தேயு 5:44

ஜெம்ஸ் சத்தம்

Since 1972

Transforming Peoples to Transform Nations

அன்பின் மடல் - 3

சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

உன்னைக் குறித்த உயர்ந்த திட்டம் - 11

பணித்தள ஜெபக் குறிப்புகள் - 17

முன்னேற்றப் பணி முகவரிகள் - 29

தலைவர்கள் உபவாசக் கூடுகை - 30

Published by

GEMS Educational and Media Services

14/1, Jeba Nagar, Vasanthapuram South,
Near Vijaya Garden, Tirunelveli 627005
Ph. : 9488771655
E-Mail : media@gemsbihar.org

Published for

Gospel Echoing Missionary Society

11, 13th Cross Street, New colony
Chrompet, Chennai - 44
Ph. : 044-22386031, 044-22380295

Field office

GEMS, Sikaria, Indrapuri - 821308
Rohtas Dist., Bihar , Ph. : 06184 - 234567
(Railway station & courier centre : Dehri on Sone)
Website : www.gemsbihar.org
E-mail : gems@gemsbihar.org

'ஜெம்ஸ்' என்பது,

Gospel Echoing Missionary Society

விசுவாச இளைஞர்கள் சிலரால் 1972-ம் ஆண்டு நிறுவப்பட்டு, 1979-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஓர் ஊழியம்.

பீஹார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் உள்ளோரைச் சந்திப்பதே இவ்வூழியத்தின் பிரதான தரிசனம். அத்துடன், ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் பணியினையும், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் பணிகளையும் தொடர்ந்து செய்துவருகின்றது. பீஹார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் மற்றும் மஹாராஷ்டிரா மாநில மக்களுக்கு நற்செய்தியினை அறிவிப்பதுடன், அண்டை நாடுகளில் நடைபெறும் ஊழியங்களையும் ஊக்குவித்துவருகின்றது. ஆதிவாசி மக்களைச் சந்திப்பது, குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோரை மறுவாழ்வு மையங்களில் ஆதரிப்பது, மருத்துவ சேவை அளிப்பது, கல்வியினால் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது போன்ற ஊழியங்களால் உன்னதரை உலகிற்கு அறிவித்துவரும் ஓர் மிஷனரி ஊழியம்.

அன்பின் மடல்

கிறிஸ்துவுக்குள் அன்பான
ஜெபப் பங்காளரே,

சமாதானத்தின் தேவன், இயேசு கிறிஸ்துவைக் கொண்டு **தமக்கு முன்பாகப் பிரியமானதை நடப்பித்து,** நாம் தம்முடைய சித்தத்தின்படி செய்ய நம்மைச் சகலவித நற்கிரியையிலும் சீர்பொருந்தப்பண்ணுகிறவருடைய நாமத்தில் வாழ்த்துகள் (எபி. 13:21). ஆகையால், **கர்த்தருக்குப் பிரியமானது** இன்னதென்று **நாம் சோதித்துப் பார்த்து** நடக்க தேவ கிருபை நமக்குப் போதுமானதாக இருப்பதாக (எபேசி. 5:10; சங். 147:11). **மனிதரைப் பிரியப்படுத்த விரும்பி தோல்வி கண்டவர்களே ஏராளம்.** அது கூடாது என்று கண்டுகொண்டவர்களும் சிலரே.

அநேக நேரங்களில் **நாம் தவறாகவும் கணக்குப் போட வாய்ப்புகள் உண்டு.** அதனை உணர்த்துமாறு தாவீதின் வாழ்வில் நடந்த சில சம்பவங்களை உங்களுக்குக் காண்பித்துக் கொடுத்தால் நலமாயிருக்குமென விரும்புகிறேன். தாவீது ஒரு நல்ல தலைவன்; அவனைத் திருப்திப்படுத்த அல்லது பிரியப்படுத்த முயன்ற சிலர் **தோற்றுப்போனதனைப்** பார்த்தால், தேவ பார்வையில் நாமும் **தேவனைப் பிரியப்படுத்த முயலும் விதங்கள் இப்படி இருக்க வாய்ப்பு உண்டு** என்பதனை அறிந்துகொள்ளலாம்.

சவுல் ராஜா தாவீதைப் பகைத்ததனை நாம் 1 சாமுவேலின் 18–ம் அதிகாரத்திலிருந்து வாசிக்கத் தொடங்குகிறோம். தாவீதை மருமகனாக்கின பின்பும் கூட அவனை அழித்துத் தீரவே வாஞ்சிக்கிறான் (1 சாமு. 19). சத்துருக்கள் நாட்டின் மேல் யுத்தம் பண்ண வந்த நேரத்திலும் கூட, சவுல் தாவீதைத் தேடிக் கண்டுபிடித்து அழிக்கும் பணியிலேயே மும்முரமாக நிற்கிறான் (1 சாமு. 23). எதார்த்தமாய் தாவீதுக்கு உதவி செய்தவர்களையும் அவன் அழித்துப்போட்டதனை வேதம் நமக்கு படமிட்டுக் காட்டுகிறது (1 சாமு. 22). கொஞ்சம் அவகாசம் கிடைத்தாலும், அவன் தாவீதை அழிக்கத் தொடர்ந்ததனை 1 சாமு. 24:1,2–ல் வாசிக்கிறோம்.

தாவீது சவுலின் பேரில் இரக்கம் காட்டியபோதும், அவன் மனம் மாறவில்லை (1 சாமு. 24). பின்னர் கர்த்தரே சவுலுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் அயர்ந்த நித்திரை கொடுத்து, தாவீது அவனைக் கொல்ல சந்தர்ப்பம் வாய்த்த போதும் (1 சாமு. 26:12) தாவீது அவனைத் தப்பவிட்டதனை மறந்தவனாகவே சவுல் அலைகிறான்.

எனவே, **உலகுக்கே தெரியும்படியாக அவனைப் பகைத்தான்.** தன்னுடைய குமாரன் யோனத்தான் தகப்பனுக்கு எத்தனையாய் எடுத்துரைத்தும், சவுலுக்கு அதனைக் கேட்க மனமில்லை. (1 சாமு. 20:32–34)

கூடவே, ராஜ்யத்தில் எல்லாரும் தாவீதை **தேவன் தெரிந்துகொண்டிருக்கிறார்** என்பதனை அறிந்திருந்தனர் (1 சாமு. 25:30). ஆகையால் பெலிஸ்தரோடு யுத்தம் நடந்தபோது, அதில் அடிபட்டு ராஜா சவுல் மரித்துப்போன செய்தி நிச்சயமாக தாவீதை மிகவும் பிரியப்படுத்தும் செய்தியாக இருக்கும் என்று **நினைத்த அமலேக்கியன்** ஒருவன், சவுலின் தலையில் இருந்த ராஜமுடியையும், அவன் புயத்தில் இருந்த அஸ்தகடகத்தையும் எடுத்துக்கொண்டு, மரண செய்தி சொல்ல வேகமாய் வருகிறான் (2 சாமு. 1:10). தற்கொலை செய்து மரிக்கும் தருவாயில் இருந்த சவுலை நான்தான் கொன்றேன் என்று கூறி, அது தனக்கு **வெகுமானத்தினைத் தரும் என்று நினைத்த அவனுக்கு கிடைத்ததோ மரண தண்டனையே.** (2 சாமு. 1:15)

தாவீது தன்னைத் துரத்தினவரை, அழிக்க முற்பட்டவரை, தான் அழித்துவிட்டபடியினால் அது தாவீதுக்கு மிகவும் விருப்பமாயிருக்கும்

என்ற **அவனுடைய தப்பெண்ணம் அவனுடைய உயிருக்கே உலை வைத்துவிட்டது. அது போலவே நாம் தேவனை திருப்திப்படுத்திவிடும் என்று நினைக்கும் காரியங்கள் நம்மை தேவ கோபாக்கினைக்கே இரையாக்கிவிடக்கூடும்** என்பது இதன் மூலம் தெளிவாகிறது அல்லவா!

இயேசுவுக்கு தங்க இடம் தர முன்வராதவர்களை, அக்கினி இறக்கி அழித்துவிட உத்தரவு கேட்டனர் சீஷர்கள். மாறாக அவரோ, அவர்களை அதட்டி உணர்த்துவித்ததனைக்தானே **தேவனைப் பிரதிபலிக்க வந்த தேவ குமாரனாகிய கிறிஸ்து நமக்குக் காண்பித்துக் கொடுக்கிறார்**. (லூக். 9:53–56)

எதிரியின் அழிவினைக்கூட விரும்பாத தாவீது, ஏற்றுக்கொள்ளாதவர்களின் அழிவையும் விரும்பாத இயேசு **நமக்குக் கற்றுக்கொடுக்கும் பாடங்கள், தேவனைப் பிரியப்படுத்த எப்படிச் செயல்படவேண்டும்** என்பதை தெளிவுபடுத்துகிறது அல்லவோ!

தாவீதின் வாழ்க்கையில் நடந்த இன்னுமொரு சம்பவத்தினை உங்களுக்குக் காண்பித்துக்கொடுக்க விரும்புகிறேன். தாவீது தன்னுடைய கோத்திரமான யூதாவுக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தான். மீதமுள்ள வம்சத்தாரையும் கோத்திரத்தாரையும் அவனுடைய ஆளுகையின் கீழ் கொண்டுவர, மரித்துப்போன சவுலின் போர்ப் படைத் தளபதியான அப்னேர் முயற்சிகளை எடுக்க ஆரம்பித்துவிட்டான் (இதனை நாம் 2 சாமு. 3–ம் அதிகாரத்தில் காணுகிறோம்). காரியங்கள் தாவீதுக்கு மிகவும் சாதகமாக நடக்க ஆரம்பித்துவிட்ட நேரத்தில், சவுலின் குடும்பத்தோடு ஒட்டிக்கொண்டிருந்த மக்களின் பலனாக விளங்கிய அப்னேர் வஞ்சகமாகக் கொல்லப்படுகிறான். **ஒரு கலக்க சூழ்நிலை** நிலவும் வேளையில் (2 சாமு. 4:1), தன் தகப்பன் ஸ்தானத்தில் ராஜாவாக வீற்றிருந்த இஸ்போசேத்தின் படைத்தலைவர்களான இரண்டு பேர் (பானா, ரேகாப்) தாவீதைப் பிரியப்படுத்துவது நலம் என்று யோசிக்க ஆரம்பிக்கின்றனர். தாவீதினிடத்தில் தங்களுக்குத் தயவு கிடைக்கப்பண்ண என்ன செய்யவேண்டும் என்பதனை கூட்டாக செயல்படுத்த விரும்புகின்றனர்.

தாவீதின் மனநிலையையோ, தாவீதின் இதயம் விரும்பும் காரியத்தினையோ அறியாமல் தாங்களே அதனை யூகிக்க ஆரம்பித்ததின் விளைவு?...

எத்தனை நேரம் நாமும் கூட தேவனைப் பிரியப்படுத்த இதைச் செய்யலாம், அதைச் செய்யலாம் என யோசிக்க ஆரம்பித்து, செயல்பட ஆரம்பிக்கிறோம். 'பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்; தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் (சங். 51:16,17) என்று சங்கீதக்காரன் சொல்லுவதுபோல, நாமும் தேவ இருதயத்தைப் புரிந்துகொண்டு செயல்படவேண்டுமே.

தேவனைக் குறித்து அறிவில்லாத பார்வோன், 'அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; ஆகையால் கர்த்தரின் வார்த்தைக்குச் செவி சாய்ப்பதில்லை' என்கிறான் (யாத். 5:2). **தேவ வார்த்தைக்கு ஒருவன் செவிகொடுக்காமல், அவருடைய விருப்பத்தினை அறிய முடியாதே!**

தேவன் பார்வோனுக்கு கொஞ்சம் கொஞ்சமாக தன்னுடைய வல்லமையை மோசேயைக் கொண்டு வாதைகள் மூலம் வெளிப்படுத்தின பின்பு, பார்வோனின் வார்த்தைகளில் மாறுதல்கள் ஏற்பட்டாலும், அது அரைகுறையாகவே உள்ளது; எனவேதான், 'புருஷராகிய நீங்கள் போய், கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள். இதுதானே நீங்கள் விரும்பிக் கேட்டது' என்று சொல்கிறான் (யாத். 10:11). **அரைகுறையான கீழ்ப்படிதல் அரைகுறை அறிவு, தேவன் விரும்புவதனைப் புரிந்துகொள்ளவே மறுக்கிறது.** நம்மில் அநேகர் இப்படிப்பட்ட சூழ்நிலையில் தள்ளப்பட்டிருக்கலாம். நாமே இதுதான் **தேவனுக்கு விருப்பமானதாக, அவருக்குப் பிரியமானதாக இருக்கலாம் என்று நம்மை அடாத காரியங்களுக்குத் தள்ளிவிடலாம்** அல்லவா!

பானாவும் மற்றும் ரேகாபும் அப்படிப்பட்ட நினைவுகளால்தான் நிறைந்தவர்களாக, சவுலின் குமாரனும், சிம்மாசனத்தின் மேல் இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகிக்கப்பட்டவனுமான (2 சாமு. 2:8,9) இஸ்போசேத் **தூ**ங்கிக்கொண்டிருந்த வேளையில், கோதுமை வாங்க வருகிறவர்கள் போலக் காட்சியளித்து, அவனைக் கொன்று, தலையைக் கொய்து, இதனைக் கண்டால் தாவீது தங்களைப் பாராட்டுவான் என்ற தகாத **சிந்தனையுடையவர்களாய்**, இஸ்போசேத்தின் தலையை தாவீதினிடத்தில் கொண்டுவருகிறார்கள். (2 சாமு. 4:5–8)

ஆனால், தாவீது என்ன சொல்கிறான் பாருங்கள். 'என்னுடைய சத்துருவின் மகனை, இஸ்ரவேலின் அரசனை கொன்று எனக்கு ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளீர்கள் என்று அவர்களைப் புகழுவான் என்று **தவறான எண்ணத்தில்** செயல்பட்டீர்கள் எனக் கூறி கடிந்துகொண்டதோடு, தங்களுக்கு வெகுமானம் கிடைக்கும் என்று சொப்பனம் கண்டிருந்த அவர்களை கொன்றுபோட்டதோடல்லாமல், அவர்களின் கைகளையும் கால்களையும் தறித்து, தூக்கிப்போட்டு, அவர்களின் உடல்களை வேடிக்கைப் பொருளுமாக்குகிறான். (2 சாமு. 4:9–12)

மீண்டும் தாவீதின் செயல் 'தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன் என்று அறியப்பட்ட மனிதன், தேவனின் இருதயத்தை' நமக்கு படம் பிடித்துக் காட்டுகிறது அல்லவா! தனக்கு போட்டியானவன் என்றாலும், அவனோடு ஏராளமான ஜனங்கள் இருக்கிறார்கள் என்பதனை அறிந்தபோதிலும், எதிரியின் ஆட்களே எதிரியைக் கொன்றுபோட்டபோதிலும், சந்தோஷப்பட்டுப் பிரியப்படாமல், எதிரியைக்கூட 'நீதிமான்' என்றே கூறுகிறான். இதுவே இஸ்ரவேலின் திரள் கூட்டம் தாவீதை ராஜாவாக ஏற்றுக்கொள்வதற்குக் காரணம் ஆகிறது அல்லவா! (2 சாமு. 5:1–3)

எதிரியையும் நேசிக்கும் நம்முடைய இரட்சகர் இயேசுவை தாவீது படம்பிடித்துக் காட்டவில்லையா? (மத். 5:44,45). தேவனின் இருதயத்தைப் புரிந்துகொண்டால்தானே, அவரை நாம் பிரியப்படுத்தமுடியும்.

ஆண்டவரின் சமுகத்தினை நித்தமும் தரிசிக்கும் தூதர் கூட்டம் அவருக்குப் பிரியமானதைச் செய்வதில் ஆச்சரியமில்லையே. (சங். 103:21)

சாலொமோனின் ஜெபம் தேவனுக்குப் **பிரியமாய் இருந்ததினால் அல்லவோ**, தேவன் அவன் வேண்டிக்கொள்ளாததையும் அவனுக்கு அருளிச் செய்தார். (1 இராஜா. 3:13)

'ராஜா தன்னைத் தவிர வேறு யாரை கனம்பண்ண விரும்புவார் என்ற **தப்பெண்ணமே,** ஆமானை அவன் வெறுத்த மொர்தெகாய்க்கு கனத்தினை செலுத்த மக்களுக்கு வெளிப்படையாக வீதி வீதியாக கூறவைத்தது. (எஸ். 6:6–11)

தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவான பின்னரும் அவனுக்கு அப்சலோமினால் பிரச்சனை வந்தது. சொந்த மகனே அவனை சிங்காசனத்திலிருந்து அகற்ற முழு முயற்சி வஞ்சகமாக எடுத்து, ஓரளவு வெற்றியும் பெற்றுவிட்டான். தற்போது தாவீதோடு இருந்தவர்களுக்கும் அப்சலோமுக்கும் நடந்த போராட்டத்தில், அப்சலோம் கொல்லப்பட்டச் செய்தி **தூ**ரத்திலிருந்த தாவீதுக்கு சென்றடையச் செய்யவேண்டியதனை படைத்தலைவனான யோவாப் செய்ய நேரிட்டபோது, கூஷி என்ற நல்ல ஓட்டக்காரனை அனுப்ப யோசனை செய்து அனுப்பியும் வைக்கிறான்.

ஆனால், அகிமாஸ் என்னும் வாலிபன் கூஷியைக் காட்டிலும் **குறுக்கு வழிகளை அறிந்திருந்தபடியினாலும், அதி வேகமாய் ஓட திறமை பெற்றவன் என்பதினாலும், எப்படியாவது** ஓடி தாவீதைப் பிரியப்படுத்தும் நோக்கில் ஓட வாஞ்சித்து, யோவாபைத் தொடர்ந்து **தொந்தரவு செய்து** (2 சாமு. 18:23), அனுமதி பெற்று ஓடி முந்திக்கொள்கிறான். அவன் எதிர்பார்த்தது, 'தாவீது ராஜா இதன் மூலம் மிகவும் சந்தோஷப்படுவார் என்பதே. ஆனால், **நடந்ததோ அப்படியல்ல**; மாறாக, தாவீது, 'நீ அங்கே போய் நில்' என்று (2 சாமு. 18:30) எந்த பாராட்டையும் கொடுக்காமல் நடத்துகிறதை பார்க்கும்போது, **நாம் ராஜாவுக்கு பிரியமாயிருக்கும் என எண்ணும் காரியங்கள், அவருக்குப் பிடித்திருக்கும் என்று அர்த்தம் கொண்டதல்ல** என்பதனை விளக்கும்.

இங்கேயும் தாவீதின் மனநிலையைக் காணலாம். **தன்னை அழிக்கவும், கொல்லவும், நற்பெயரைக் கெடுக்கவும் முனைந்த அப்சலோமுக்காக அழுது புலம்புகிறான்.**

'துன்மார்க்கன் சாகிறது எனக்கு எவ்வளவேனும் பிரியமோ? அவன் தன் வழிகளை விட்டுத் திரும்பிப் பிழைப்பது அல்லவோ எனக்குப் பிரியம்' என்ற **கர்த்தரின் இதயத் துடிப்பு தாவீதிலும் தொனிக்கிறதே.** (எசே. 18:23)

'நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன்' (எசே. 33:11) என்றவரின் இருதயத்தின் நினைவுகளை நாம் அறிந்தால், அவரைப் பிரியப்படுத்த, **துன்மார்க்கர்களையும் சந்திக்க அத்தனை பிரயாசங்களை எடுப்போம் அல்லவா!**

ஆண்டவரை அறியாத புறஜாதிகளை தேவனுக்கு நேராக வழிநடத்துவதும், பரிசுத்த ஆவியின் பெலத்தினால் பரிசுத்தத்திற்கு நேராக நடத்துவதும் **தேவனுக்குப் பிரியமானது** என்று உணர்ந்து செயல்பட்டால், **மிஷனரி ஊழியங்களின் அத்தியாவசியத் தேவை நன்றாகத் தெரியும்.** (ரோமர் 15:15)

புறஜாதியாரின் மத்தியில் ஊழியம் செய்வோர், அவர்களை வார்த்தையினாலும், செய்கையினாலும், கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும் கிரியை செய்ய **அவர்களுக்காக ஜெபிக்க ஏவப்படுவதும் நம்மை ஊக்குவிக்குமே.** (ரோமர் 15:18)

அவருக்கு பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம் என்ற வாஞ்சை (2 கொரி. 5:9) நம்மில் பெருகுமானால், 'பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க **தேவனுக்குப் பிரியமாயிருக்கிறது** என்பதில் அதிக கவனம் செலுத்தவும் **ஆர்வம் காட்டவும் ஊக்கமளிக்கவும் நம்மால் இயன்ற அனைத்தையும் செய்வோம் அல்லவா!** (1 கொரி. 1:21)

நமக்குள்ளேயே அவரைப் பிரியப்படுத்தும் வழி இதுதான் என்று தவறாகக் கணக்குப் போட்ட அமலேக்கியனைப் போலவோ, இஸ்போசேத்தின் படைத் தலைவர்களைப் போலவோ, அகிமாசைப் போலவோ நாம் இல்லாதபடி தேவன் நம்மைக் காப்பாராக. தானியேல் தேவனுக்குப் பிரியமானவன் (தானி. 9:25; 10:11,19), மணவாட்டி தேவனுக்குப் பிரியமானவள் (உன்னத. 2:2,7; 3:5;8:4), நாமும் பிரியமான பிள்ளைகளாக (எபேசி. 5:1) வாழ தேவன் கிருபை செய்வாராக.

அன்புடையீர், 2019–ம் ஆண்டு நிர்வாக இயக்குநராகப் பொறுப்பேற்ற சகோ. ராஜேஷ் டத்தியின் இரண்டு வருட காலங்கள், நம்முடைய இயக்கத்தின் விதிமுறைகளின்படி 2021 ஜுன் மாதத்தோடு நிறைவுபெற்றதைத் தொடர்ந்து, தற்போது அந்தப் பொறுப்பு என்னுடைய பராமரிப்பில் செயல்படுகிறது என்பதனை தெரிவித்துக்கொள்ளுகின்றேன். 'எங்களுக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் நலமாகக் கண்டது' (அப். 15:29) என்ற வசனத்தின்படி வரும் நாட்களில் செயல்படும்படியாகவும்,

தேவ கிருபையினாலும், வழிநடத்துதல்களினாலும், அவரது அனாதி சித்தத்தின்படியும் திட்டத்தின்படியும் ஜெம்ஸ் இயக்கத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்காகவும், தேவன் விரும்பும் கட்டமைப்பின் மாற்றங்களை செயல்படுத்தவும் தேவன் உதவிசெய்யும்படி ஜெபிக்க உங்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

மெச்சிக் கொள்வார் என்று எண்ணி
இச்சித்ததனைச் செய்து இழந்தார் பாராட்டினை
கச்சிதமாய் செய்துவிட்டேன் என்று எண்ணி
கஷ்டமான முடிவையே கண்டனர் இறுதியில்

நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறார்
நீதிபரராம் தேவன் என்ற நியதியை
பாதியும் அறியாமல் வாழ்ந்து முடிக்கும்
பாதகராக மாறாதிருக்க வேண்டும்

பகைவனையும் பகைக்கப்படத் தக்கவரை
பக்குவமாய் தேவன் பக்கமாய் திருப்ப
பக்தியோடு கூட புத்தியும் தேவையல்லோ
பக்கத்திலேயே நடப்போம் பரமனோடு

பொல்லாதோரும் துன்மார்க்கரும் கூட
சொல்லாமல் விடப்பட்டு விடக்கூடாதே
கல்லாதோரும் கற்ற பெருமான்களும்
இல்லாது போகக்கூடாது இரட்சிப்பு

அன்பரின் அறுவடைப் பணியில்

அன்பு சகோதரர் D. அகஸ்டின் ஜெபக்குமார்



உன்னைக் குறித்த உயர்ந்த திட்டம்

சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார்

பின்பு மோசே மோவாபின் சமனான வெளிகளிலிருந்து எரிகோவுக்கு எதிரான நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் ஏறினான்; அப்பொழுது கர்த்தர் அவனுக்கு, தாண் மட்டுமுள்ள கீலேயாத் தேசம் அனைத்தையும், நப்தலி தேசம் அனைத்தையும், எப்பிராயீம் மனாசே என்பவர்களின் தேசத்தையும், கடைசிச் சமுத்திரம்வரைக்குமுள்ள யூதா தேசம் அனைத்தையும், தென்புறத்தையும், சோவார் வரைக்குமுள்ள பேரீச்சமரங்களின் பட்டணம் என்னும் ஊர்முதற்கொண்டு எரிகோவின் பள்ளத்தாக்காகிய சமனான பூமியையும் காண்பித்தார். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இதுதான், இதை உன் கண் காணும்படி செய்தேன்; ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்துபோவதில்லை என்றார். (உபா. 34:1-4)

ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு ஆகியோருக்கு வாக்களித்திருந்த தேசமாகிய கானானுக்குள், உன் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களைக் கொண்டுசெல்வேன் என்று மோசேக்கு ஆண்டவர் வாக்களித்திருந்தார். ஆனால், ஜனங்களோ வழியிலே மீண்டும், மீண்டும் தேவனை பரீட்சை பார்த்துக்கொண்டேயிருந்தார்கள், ஜனங்களின் தொந்தரவுகளினாலும், விருப்பங்களினாலும், வேண்டுதல்களினாலும் மோசேயுங்கூட தன்னில்தானே சோர்ந்துபோய்விட்டான்; அவனுடைய இருதயமும் துக்கத்தினால் நிறைந்ததாகவே காணப்பட்டது. அதுமாத்திரமல்ல, ஜனங்களை வழிநடத்திச் செல்லும் தலைவனாகிய மோசே, ஜனங்களுக்கு முன்பாகவும் மற்றும் தேவனுக்கு முன்பாகவும் பொறுமையை இழந்துபோகும் நிலைக்கும்கூட தள்ளப்பட்டான்.

இஸ்ரவேல் புத்திரரின் சபையார் எல்லாரும் முதலாம் மாதத்தில் சீன்வனாந்தரத்திலே சேர்ந்து, ஜனங்கள் காதேசிலே தங்கியிருக்கையில், ஜனங்களுக்குத் தண்ணீர் இல்லாதிருந்தது; அப்பொழுது அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடினார்கள், மோசேயோடு வாக்குவாதம்பண்ணினார்கள், நாங்களும் மாண்டுபோயிருந்தால் நலம் என்றார்கள், குடிக்கத்தண்ணீரும் இல்லாத இந்தக் கெட்ட இடத்தில் எங்களைக் கொண்டுவரும்படி, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினது என்ன என்றார்கள் (எண். 20:1 — 5). அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச்செய்து, அவர்கள் கண்களுக்குமுன்னே **கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்**; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ அவர்களுக்குக் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார் (எண். 20:8). என்றாலும், ஜனங்களுடைய நெருக்குதல்களினாலும், அழுத்தத்தினாலும் பொறுமையை இழந்திருந்த மோசே, ஆண்டவருடைய கட்டளையின்படி கன்மலையைப் பார்த்துப் பேசுவதற்குப் பதிலாக, தன் கரத்தில் இருந்த கோலினால் அதனை அடித்துவிட்டான் (எண். 20:11). ஜனங்கள் கேட்டுக்கொண்டபடி அவர்களுக்கு தண்ணீர் கிடைத்துவிட்டது; என்றாலும், கர்த்தருடைய வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படியாமல், கன்மலையைப் பார்த்து பேசுவதற்குப் பதிலாக, அதனை அடித்துவிட்ட மோசேயின் மீது தேவன் கோபமுள்ளவரானார். கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி:

இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச் சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை என்றார். (எண். 20:12)

தான் விரும்பிய கானான் தேசத்தைப் பார்க்கும்படியாக மீண்டும் மீண்டும் தேவனிடத்தில் மோசே வேண்டிக்கொண்டேயிருந்தான். ஆண்டவரே, நாற்பது வருடங்கள் இந்த ஜனங்களை மிகுந்த பொறுமையோடுகூட நான் வழிநடத்திக்கொண்டுவந்திருக்கிறேன். "இவர்களுடைய பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக்கொடுத்த தேசத்துக்கு நீ இவர்களை முலையுண்கிற பாலகனைத் தகப்பன் சுமந்துகொண்டுபோவதுபோல, உன் மார்பிலே அணைத்துக்கொண்டுபோ என்று நீர் என்னோடே சொல்லும்படி இந்த ஜனங்களையெல்லாம் கர்ப்பந்தரித்தேனோ? இவர்களைப் பெற்றது நானோ?" (எண். 11:12) என்று சொல்லுமளவிற்கு சில வேளைகளில் நான் சோர்ந்தவனாகக் காணப்பட்டபோதிலும், நீர் எனக்கு பலன் தந்து, இதுவரை நாற்பது வருடங்கள் இந்த ஜனங்களை வழிநடத்திக்கொண்டுவர உதவிசெய்தீர். ஆனால், இப்பொழுதோ என் ஆவியிலும், ஆத்துமாவிலும் அவர்கள் எனக்குக் கொடுத்த தொந்தரவின் நிமித்தம், அழுத்தத்தின் நிமித்தம், நெருக்கத்தின் நிமித்தமும் நான் பொறுமையை இழந்ததினாலேயே இப்படிச் செய்துவிட்டேன்; அதற்காக, இத்தனை பெரிய தண்டனையை தயவுசெய்து எனக்குத் தரவேண்டாம் ஆண்டவரே என்று மோசே வேண்டியிருப்பான்.

"நான் கடந்துபோய் யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும், அந்த நல்ல மலையையும், லீபனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும் என்று வேண்டிக்கொண்டேன். கர்த்தரோ உங்கள் நிமித்தம் என்மேல் கோபங்கொண்டு, எனக்குச் செவிகொடாமல், என்னை நோக்கி: **போதும், இனி இந்தக் காரியத்தைக்குறித்து என்னோடே பேசவேண்டாம்.** நீ பிஸ்காவின் கொடுமுடியில் ஏறி, உன் கண்களை மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் கிழக்கிலும் ஏறெடுத்து, உன் கண்களினாலே அதைப் பார்; இந்த யோர்தானை நீ கடந்துபோவதில்லை" (உபா. 3:25 – 27) என்று மோசேயின் விண்ணப்பத்தைக் குறித்தும், தேவன் அவனுக்குக் கொடுத்த பதிலைக் குறித்தும் வேதத்தில் நாம் வாசிக்கின்றோமே.

ஆண்டவரே, உம்மை முக முகமாக நான் தரிசித்திருக்கிறேன்; ஒரு சிநேகிதனைப் போல உம்மோடு நான் பேசியிருக்கிறேன். நான் நடத்திக்கொண்டுவந்த ஜனங்களுக்காகவே உம்முடைய சமுகத்தில் நான் நின்றிருக்கின்றேன். "தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்" (யாத். *32:32*) என்று சொல்லும் நிலைவரைக்கும் இவர்களை வழிநடத்தவும், காப்பாற்றவும் என்னை நான் அர்ப்பணித்திருக்கின்றேன். இத்தனையாய் இந்த ஜனங்களுக்காக என்னையே ஒப்புக்கொடுத்த எனக்கு, இந்த விஷயத்தில் சற்று இரக்கம் பாராட்டக்கூடாதா? என்றுகூட மோசே கர்த்தரிடத்தில் வேண்டியிருப்பான். என்றாலும், "**போதும், இனி இந்தக் காரியத்தைக்குறித்து என்னோடே பேசவேண்டாம்**" என்று கடினமாகவே கர்த்தர் மோசேக்கு உத்தரவு அருளுகின்றார். தேவன் பொறுமையுள்ளவரல்லவா? இந்த சிறிய தவற்றிற்கு இத்தனை பெரிய தண்டனையைக் கொடுப்பாரோ? ஒரு சிறிய காரியத்தினை இத்தனை பெரிதாக யோசிப்பாரோ? எத்தனை முறை ஜெபித்தாலும் இரக்கம் பாராட்டமாட்டாரோ? போன்ற கேள்விகளும், எண்ணங்களும் நம்முடைய சிந்தனையில் உண்டாகக்கூடும். நாம் ஜெபிக்கிறபடியே ஒருவேளை தேவன் நமக்கு உத்தரவு கொடுக்காமலிருக்கலாம். ஆண்டவர் கொடுத்திருக்கும் வாக்குத்தத்தங்களை ஞாபகமூட்டி நாம் ஜெபித்திருந்தபோதிலும், ஆண்டவரோ கேட்காதவர்போலவே காணப்படக்கூடும். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில், என்னுடைய ஜெபத்தைக்கூட கேட்காதவாறு, அவர் கடினமுள்ளவராயிருக்கிறாரே, அவருக்கு ஊழியம் செய்வதினால் இலாபம் என்ன என்ற எண்ணம்கூட நமக்குள் உருவாகக்கூடும்.

நாற்பது ஆண்டுகள் ஊழியம் செய்து என்ன இலாபம்? சுகங்களை இழந்து என்ன இலாபம்? என்னுடைய பெலத்தையும், சக்தியையும் ஊழியத்திற்காகவே செலவழித்து என்ன இலாபம்? இதுவரைக்கும் எனக்கென நான் எதையும் கேட்கவில்லையே; நான் வேண்டிக்கொண்டதும், கேட்டதும் எல்லாம் நான் வழிநடத்திக்கொண்டுவந்த ஜனங்களுக்காகத்தானே. ஆனால், இப்பொழுதோ, எனக்கென்று ஒரே ஒரு விண்ணப்பத்தைக் கேட்கிறேன்; என்றாலும், நீர் இத்தனை கடினமானவராகக் காணப்படுவது என்ன? கொஞ்சமாவது என்மேல் இரக்கம் பாராட்டக்கூடாதா? என்று மோசே தனக்குள் நினைத்திருக்கக்கூடும்.

என்றாலும், மோசேயின் விருப்பத்தைக் காட்டிலும் **உயர்ந்ததோர் திட்டத்தினை மோசேக்காக தேவன் வைத்திருந்தார்.** உயர்ந்த மலையின் மீது அவனை ஏற்றி, ஏறக்குறைய 300 கி.மீ தூரத்திலுள்ள கானான் தேசம் முழுவதையும் கண்களால் அவன் காணும்படிச் செய்தார். சாதாரணமான ஓர் மனிதன் இரண்டு அல்லது மூன்று கி.மீ தூரம் வரை துல்லியமாகக் காண்பது அரிதான காரியம்; என்றாலும், எந்த மனிதனுக்கும் கொடுக்கப்படாத ஓர் அனுக்கிரகத்தினை மோசேக்கு தேவன் அருளிச்செய்து, 300 கி.மீ தூரத்திலுள்ள தேசத்தைக் காணும்படியாக அவனது கண்களுக்கு பெலனளித்தாரே அப்போது மோசேயின் வயதோ 120. மோசே அதனை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை; அவனுடைய எண்ணமெல்லாம், யோர்தானைக் கடந்து கானானுக்குள் கால்பதித்துவிடவேண்டும் என்பதுதான். ஆனால், **மோசேயின் விருப்பத்தைக் காட்டிலும் உயர்ந்ததோர் திட்டம் தேவனிடத்தில் இருந்தது.** கானான் தேசத்திலிருந்த மலைகளையும், பள்ளத்தாக்குகளையும், விருட்சங்களையும், நதிகளையும் காணுமளவிற்கு மோசேயின் கண்களுக்கு தேவன் பெலன் கொடுத்தார். ஆண்டவர் என்னுடைய ஜெபங்களையும், வேண்டுதல்களையும் கேட்கவில்லை, என்னுடைய துக்கங்களை ஆண்டவர் புரிந்துகொள்ளவில்லை, எனக்குள் இருக்கின்ற போராட்டங்களை ஆண்டவர் விலக்கிப்போடவில்லை, எனக்குள் இருக்கும் ஒரு சிறிய விருப்பத்தைக்கூட நிறைவேற்ற ஆண்டவர் இடம் கொடுக்கவில்லை, நீண்ட நாட்களாக எனக்குள்

இருக்கும் சிறியதோர் ஆசையைக்கூட அவர் நிறைவேற்றவில்லை, இப்படிப்பட்ட ஆண்டவருக்கு ஊழியம் செய்து என்ன இலாபம்? என்ற கேள்வியும், எண்ணமும் ஒருவேளை நம்முடைய மனதில் உண்டாகியிருக்கக்கூடும் அல்லது அப்படிப்பட்ட நினைவுகளால் நாம் சோர்ந்துபோயிருக்கக்கூடும். என்றாலும், **நாம் வேண்டிக்கொள்வதற்கும், நினைப்பதற்கும் அதிகமாகவும், நாம் விரும்புவதைக் காட்டிலும் உயர்வானதாகவுமான ஓர் திட்டம் தேவனிடத்தில் நமக்காக உண்டு என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.**

அதுமாத்திரமல்ல, ஆறுநாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள் (மத். 17:1 – 3) என்றும் வாசிக்கின்றோமே. ஆண்டவர், தான் கொடுத்த வாக்குத்தத்தத்திலிருந்து ஒருபோதும் பின்வாங்குவதில்லை. **மோசேக்கு அவர் கொடுத்த வாக்குத்தத்தம் தாமதமானது; என்றாலும், மகிமையோடு கூட அது மலையின்மேல் நிறைவேறியது.** நம்முடைய விருப்பங்களையும், ஆசைகளையும் மட்டுமே நிறைவேற்ற விரும்புகிறவர்களாக அல்ல, அவர் நம்முடைய வாழ்க்கையில் வைத்திருக்கின்ற நன்மைகளையும், உயர்ந்த திட்டங்களையும், மகிமையான நோக்கங்களையும் காண்பவர்களாக நாம் மாறுவோம். அப்படிப்பட்ட கண்கள் நமக்கு உண்டாயிருந்தால், நாம் ஒருபோதும் சோர்ந்துபோகமாட்டோம், வெட்கமடையவுமாட்டோம். மோசேயைப் போல நம்முடைய ஆவிக்குரிய கண்களும் பெலனுள்ளதாக மாறட்டும்.

பணித்தள ஜெபக் குறிப்புகள்

PEACE III கோட்டம்

ஆகஸ்ட் 01 ஜோகர்பட்டி

பட்ஹரவா, பன்கட்வா, பேல்வாஹி, பரவாஷேக், மட்டியா ரசுல்பூர், அஹிரோலி, ஹர்பூரவா, பஹுவாரவா, மனோபட்டி, சோரஹி, பரவாசானி, பத்தேஹ்பூர் ஆகிய 12 கிராமங்களில் பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக ஆர்வமுள்ளவர்களுக்கு புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. விசுவாசிகளின் குடும்பங்களில் ஜெபக் கூடுகை நடத்தப்பட்டன. குல்தீப்ராம் குடும்பத்தினர் விசுவாசத்தில் வந்துள்ளனர். அடிக்கடி தலைவலியினால் கஷ்டப்பட்ட தரம்சீலாவுக்கு தேவன் அற்புத சுகம் கொடுத்தார். சாத்தான் தொல்லையால் பாதிக்கப்பட்ட பப்புகுமாருக்கு ஜெபத்தின் உதவியால் விடுதலை கிடைத்தது. கங்காராம், ராகுல்ராம், கிருஷ்ணா ஷா மற்றும் அவருடைய குடும்பத்தினரின் இரட்சிப்பிற்காகவும், 8 மாதங்களாக படுக்கையில் இருக்கும் குல்தீப்ராம் சுகமாகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 02 பெத்தியா

இக்கோட்டத்தின் தலைமைப் பணித்தளமாக இப்பணித்தளம் செயல்படுகிறது. பெண் தலைவர்களுக்கான பயிற்சி மையத்தின் வாயிலாக அநேக சகோதரிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். நடா மற்றும் பக்கியா கிராமங்களில் உள்ள விசுவாசிகளின் குடும்பங்கள் சந்திக்கப்பட்டன. வீட்டு சபை ஆராதனையில் அநேகர் கலந்துகொண்டு தேசத்திற்காக ஜெபித்தார்கள். மாலைதோறும் விசுவாசிகளுக்கு வேதாகமப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 13 ஏழை குடும்பத்தினருக்கு உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. வயிற்று வலியால் பாதிக்கப்பட்டிருக்கும் ராம்தேவ்

மனைவியின் சுகத்திற்காகவும், இருதயத்தில் ஓட்டை விழுந்திருக்கும் ஒரு மாதக் கைக்குழந்தையின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 03 நிமுயா

கோதர்கட், ரகுனாத்பூர், யோகிபிப்ரா, பிப்ரா, பன்கட்வா, சம்பாபூர், திபஹி, கம்ஹரியா, நிமேயியா ஆகிய கிராமங்களில் விசுவாசிகளின் வீடுகளில் ஜெபக் கூடுகை மற்றும் ஞாயிறு ஆராதனை நடத்தப்பட்டது. பணித்தள சபையில் உபவாசக் கூட்டம் மற்றும் சிறப்பு ஜெபக் கூட்டம் நடத்தப்பட்டன. சபைக் கட்டிடத்தை சுற்றிலும் சுவர் கட்டி வளாகம் பாதுகாக்கப்படவும், ஊழியர் தங்கும் இல்லம் கட்டப்படவும், விசுவாசி சுமன்குமாரின் உறவினர்களால் காணப்படும் எதிர்ப்புகள் மாறவும், இப்பணித்தள ஊழியருடைய மகள் நிர்மலாவின் திருமண வாழ்க்கைக்காகவும், மகன்களின் உயர் கல்வி படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 04 பைரோகஞ்

ஜூட்பகரி, கப்பர்திகா, நடா, கோல்வா, பக்கியா, பகரி, சிக்தௌள், இனர்பரவா ஆகிய இடங்களில் புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டு, சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஜூட்பகரி பகுதியில் மஞ்சுதேவி வீட்டில் புதிதாக வீட்டுசபை தொடங்கப்பட்டுள்ளது. சபைக் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. காய்ச்சல் ஏற்பட்டு 50 நாட்களுக்கு மேலாக படுக்கையில் இருந்த மோத்திலால், கொரோனா நோயால் பாதிக்கப்பட்டிருந்த ஓம்பிரகாஷ் ஆகியோர் தொடர் ஜெபத்தால் சுகமானார்கள். மழையினால் வீடுகளை இழந்திருக்கும் முன்னிதேவி, சுனிதாதேவி, ரீனாதேவி, சோபாதேவி ஆகியோர் தங்குவதற்கு வீடு கிடைக்கவும், வெளிநாடுகளில் வேலைக்கு சென்றிருக்கும் சபை விசுவாசிகளுக்கு தேவன் பாதுகாப்பைக் கொடுக்கவும், ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக இருக்கிற விசுவாசிகளுக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 05 மஜௌலியா

கேஷவன் பண்டாடிஹ் கிராமத்தில் சிறுவர்கள் மத்தியில் பாடல்கள், வசனங்கள் வாயிலாக சுவிசேஷம் கடந்து சென்றது. ஜோகாடிஹ் கிராமத்தில் முன்னிதேவியின் வீட்டில் முதன் முதலாக ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. சுகௌலி பணித்தளத்தில் சபைக்கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பானாசௌவுக் கிராமத்தில் 3 குடும்பத்தினருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பொய் வழக்கினால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சரோஜாதேவி விடுதலை பெற்று சந்தோஷமாக வெளியில் வந்தார். ஆலயத்தின் சுற்றுச்சுவர் வேலை விரைவில் முடிக்கப்படவும், சுனில் மற்றும் அசோக் குடும்பமாக இரட்சிக்கப்படவும் மற்றும் இப்பணித்தள ஊழியருடைய மகன் சாமுவேல் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

⋙ ஆகஸ்ட் 06 நௌட்டான்

பஞ்ஜாரியா, கமலுவா, சிம்ரா ஆகிய கிராமங்களில் புதிய ஏற்பாடுகள் கொடுத்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பேடியாராவா, சிவ்ராஜ்பூர், பகஹி, ஜெய்நகர் ஆகிய இடங்களில் வீட்டு சபை ஆராதனை நடத்தப்படுகிறது. மன்ஜரியா பகுதியில் புதிதாக வீட்டு சபை தொடங்க வழி திறக்கப்பட்டுள்ளது. பயாஸ்யாதவ், ரீனாதேவி, மாலாதேவி மற்றும் கோவிந்த்கஞ்ச் பகுதியை சேர்ந்த பூத்நூல்தேவி, சுரேஷ்ராம் ஆகியோர் உற்சாகமாக ஆராதனையில் கலந்துகொண்டனர். கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட நவ்வல்ராம் என்பவருக்கு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார். பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டுவதற்கு நிலம் வாங்கப்படவும், டைபாய்டு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருக்கும் சீமாதேவியின் சுகத்திற்காகவும் மற்றும் பயாஸ்யாதவ், ரீனாதேவி, விஜய்ராம் ஆகியோரின் இரட்சிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

⋙ ஆகஸ்ட் 07 ஜகதீஷ்பூர்

சந்தோஷ், நோனேயா, தேவரியா, மலாஹிடோலா, ஜக்ரா, கஹிரி, சோனாவல், கைரவா, பன்ஜாரிபட்டி, ஜமுனியா ஆகிய கிராமங்களில் உள்ள விசுவாசிகள் சந்திக்கப்பட்டனர். நௌத்தன், மோத்திகாரி, சுகௌலி, பைரோகஞ்ச் சபை விசுவாசிகள் இணைந்து தொடர் சங்கிலி ஜெபம் நடத்தினார்கள். விபத்துக்குள்ளான சாந்திதேவி, விசுவாசி தினேஷ்குமார் இருவருடைய ஜீவனை தேவன் அற்புதமாகப் பாதுகாத்தார். சபைக் கட்டிடத்தைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டப்படவும், சுரேஷ் சரிதா தம்பதிகளுக்கு தேவன் குழந்தை பாக்கியத்தைக் கொடுக்கவும், ஹரிசங்கர், நேஹா, குஞ்சன்குமாரி ஆகியோர் மனநிலை பாதிப்பிலிருந்து சுகமாகவும் ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக இருக்கிற முகேஷ், தர்கேஷ்வர் பட்டேல், ரம்பாதேவி, குஞ்சன், ரிஷிராம், சாந்திதேவி, சோனு, சுஜித், குந்தன், ரமேஷ், சுரேஷ், சரிதா, காஜல், அகிலேஷ் ஆகியோருக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 08 ரக்சௌல்

அதோடு கிராம விசுவாசிகள் கைபேசி மூலமாக தொடர்புகொண்டு உற்சாகப் படுத்தப்பட்டார்கள். வீட்டுசபைகளில் ஞாயிறு ஆராதனை நடத்தப்பட்டது. நெடுநாள் ஜெபத்தின் பயனாக சபைக் கட்டிடத்தின் பழுதுபார்க்கும் பணி முடிவடைந்தது. வியாதிப்பட்ட சக ஊழியர்களை டங்கன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று ஏற்ற நேரத்தில் சிகிச்சைக் கொடுக்கப்பட்டது. கொரோனா நோயால் பாதிக்கப்பட்டிருந்த ஷீபா, ராமகிருஷ்ணா, முத்துரத்தினம், டேவிட் ஆகியோர் சுகமானார்கள். சபை ஆராதனைக்கு தேவையான உபகரணங்கள் வாங்கப்படவும், பொது முடக்கத்தின் நிமித்தம் பொருளாதார நெருக்கத்தில் இருக்கிற சபை விசுவாசிகளுக்காகவும், புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 09 பைரியா

பிரச்சனையில் உள்ளவர்களுக்கு தொலைபேசி மூலமாக ஜெபித்ததுடன், 50 பேருக்கு சுவிசேஷமும் அறிவிக்கப்பட்டது. சபையில் திருவசனத்தைக் கேட்டவர்களில் 8 பேர் திருமுழுக்குப் பெற ஒப்புக்கொடுத்துள்ளார்கள். புதிதாக 2 குடும்பத்தினர் வீட்டுசபை ஆரரதனையில் கலந்து கொள்கிறார்கள். அங்கூர் மனைவி முன்னிதேவி மற்றும் மண்டு பாஸ்வான் மனைவி சில்பாதேவி ஆகியோருக்கு ஜெபத்தின் உதவியால் சாத்தான் தொல்லையிலிருந்து விடுதலை கிடைத்தது. சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து கிராமங்களிலும் வீட்டு சபைகள் ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 10 சுஹாடி

சுதல்பூர் மற்றும் கோக்ரா ஆகிய புதிய கிராமங்களில் வசனம் அறிவிக்கப்பட்டு, சுமார் 230 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. தவஹி, பட்ஹான், சப்வா, புவரியா, திரிவேணி, பெல்வதியா, சுகௌலி ஆகிய கிராமங்களில் விசுவாசிகள் சந்திக்கப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்டார்கள். 20 சிறுவர்கள் வேதாகமக் கதைகள் மூலமாக வசனத்தைக் கற்று வருகிறார்கள். கடந்த சில வருடங்களாக உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த குளோரியா, வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருந்த அமித்குமார் ஆகியோர் தேவ கிருபையால் பூரண சுகமானார்கள். பணித்தளத்தில் தொடங்கப்பட்டுள்ள சபைக் கட்டிடப்பணி தடையின்றி முடிக்கப்படவும், சுகௌலி பஞ்சாயத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் சுவிசேஷம்

அறிவிக்க வாசல் திறக்கப்படவும் மற்றும் இப்பகுதியில் போதைப் பொருளுக்கு அடிமையாக இருக்கும் மக்கள் விடுதலையாகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 11 ராம்நகர்

சாங்கி, பீர்கஹானி, சோவர் ஆகிய 3 புதிய கிராமங்களில் சுவிசேஷம் தடையின்றி அறிவிக்கப்பட்டது. பாசுதேவ்ராம், விசேஷ்வர்ராம், ராம்ஷேரன் குமார், கரிமன், உமேஷ்ராம், பிராபாவதிதேவி ஆகியோர் புதிய தொடர்பில் உள்ளனர். நரம்புத் தளர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருந்த ராம்ஷரண்ராம் ஜெபத்தால் சுகமானார். இதினிமித்தம் தனது மனைவியுடன் ஆராதனையில் கலந்துகொள்கிறார். துபௌலா கிராமத்தைச் சேர்ந்த ராஜேஷ்ராய் மகன் ராம்பாபு பிசாசின் கிரியையிலிருந்து இயேசுவின் நாமத்தில் விடுதலையானார். இப்பணித்தள ஊழியருக்கு விரோதமாக செயல்படுகிற பச்சம்ராம் மற்றும் சோட்டே லால்ராம் மனந்திரும்பவும், திருமுழுக்குப் பெற ஆயத்தமாக இருக்கிற சாகர்ராம், முன்னிதேவி, பச்சு சௌதிரி, லால்ஷாதேவி ஆகியோருக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 12 பரோஹியா

லகுனாஹா மற்றும் மிஷ்ரோலி மகய் ஆகிய கிராமங்களில் புதிய ஏற்பாடுகள் கொடுத்து முதன் முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பனாமாடோலா, விருக்திடோலா, லோகோரியா, டேங்ரஹியா, பசேத்பூர், சன்பட்டியா, உபஹயாடோலா, மஹூவா, நைன்மகதி, கிதோராடோலா, பலிராம்பூர், லோகல்ஹரா ஆகிய இடங்களில் தொடர் ஊழியம் செய்யப்படுகிறது. ராணி, உமாதேவி, சங்கர்ராம், சாந்திதேவி, கிஷோர் மெகத்தோ, தானாமதிதேவி, மாலதி, ராம்தேவி ஆகியோரது வீடுகளில் ஆராதனை நடத்தப்பட்டது. இப்பணித்தளத்தில் சொந்தமாக ஆலயம் கட்டப்படவும், அடிக்கடி வியாதிப்படுகிற சபை விசுவாசிகள் சிவ்பூஜன் மெஹத்தோ, சந்த்காளி, ராணி, ரஞ்சித் மற்றும் மீனாகாத்தூன் குடும்பத்தினரின் சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 13 வால்மீஹிநகர்

சுவிசேஷம் அறிவிக்கப்பட்ட 5 கிராமங்களில் ஆர்வமுள்ளவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. விசுவாசிகளின் வீடுகளில் நடத்தப்பட்ட ஜெபக் கூடுகையில் புதிதாகக் சலந்து கொண்டவர்களுக்கு சுவிசேஷம்

அறிவிக்கப்பட்டது. வயிற்றுவலி மற்றும் சிறுநீரகக் கல்லினால் பாதிக்கப்பட்ட சரிதாதேவியின் வேதனையை தேவன் மாற்றிப்போட்டார். மோஹித் மற்றும் சரோஹி ஆகியோருக்கு சொந்தமாக வீடு கொடுத்து தேவன் ஆசீர்வதித்தார். சபைக் கட்டிடத்தை சுற்றிலும் சுற்றுச்சுவர் கட்டப்படவும், அசுத்த ஆவியின் கிரியையினால் பாதிக்கப்பட்டிருக்கும் அனித்தாதேவியின் விடுதலைக்காகவும், சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள எல்லா கிராமங்களிலும் ஜெபக் கூடுகை ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 14 குருஹியா

இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் கடந்து சென்றது. தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்த தாய் மற்றும் மகளுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு புதிய தொடர்பில் இருந்தவர்கள், இப்பொழுது இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு திருமுழுக்குப் பெற்றார்கள். நலத்திட்டத்தின் வாயிலாக பராமரிக்கப்படுகிற சிறுவர்கள் வசனத்தைக் கருத்தோடு கற்றுவருகின்றனர். திருமணமாகி 10 வருடங்களாக குழந்தை பாக்கியமில்லாதிருந்த புஷ்பாவின் கர்ப்பத்தை தேவன் ஆசீர்வதித்துள்ளார். குருஹியா பணித்தளத்தைச் சுற்றியுள்ள பகுதி மக்களின் இரட்சிப்பிற்காகவும், இப்பணித்தள ஊழியருடைய பிள்ளைகள் சுமன்குமாரி, சன்மதிகுமாரி, அந்திமா குமாரி, அசரியா குமாரி ஆகியோருடைய படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 15 கர்நாட்டான்ட்

நித்திஷ்நகர், கனௌலி ஆகிய புதிய கிராமங்களில் செய்யப்பட்ட தனிநபர் ஊழியத்தின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஹர்கட்டி, ஜாடர், அமகட், லௌஹரா, பைரியாகாலா, தியோகட், ஹரைனாடாட் ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 70 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன. விஷ்ராம் மற்றும் குசும்தேவி குடும்பத்தினர் புதிய தொடர்பில் உள்ளனர். ஹர்கட்டி, ஜாடர் கிராமங்களில் சிறுவர் கூடுகை நடத்தப்பட்டது. அமகட், லௌஹரா, பைரியாகாலா ஆகிய இடங்களில் வீட்டு சபை ஆராதனை நடத்தப்பட்டது. பின்மாற்றத்திலிருக்கும் விசுவாசிகள் மீண்டும் சபை ஆராதனையில் கலந்துகொள்ளவும், போதைப் பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள இப்பகுதி வாலிபர்களின் விடுதலைக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 16 மோத்திகாரி

ஸ்ரீகிருஷ்ணாநகர், மிஷன்சௌவுக், கோடாசாகன், ஞான்பூல் சௌவுக், குர்மியா, நிமையா ஆகிய கிராமங்களில் விசுவாசிகளின் குடும்பத்தினர் சந்திக்கப்பட்டனர். கோடாசாகன் மற்றும் குர்மியா போன்ற இடங்களில் வீட்டு சபை ஆராதனை நடத்தப்பட்டது. பணித்தளத்தில் ஆலயக் கட்டுமானப் பணிகளைத் தொடங்க தேவன் கிருபை செய்தார். விசுவாசிகளின் குடும்பங்களில் காணப்படும் பொருளாதாரக் குறைவு மாறவும், திருமுழுக்குப் பெற ஆயத்தமாக இருக்கும் ஹீராலால், சஞ்சித், சம்பு மற்றும் சுவிசேஷ ஊழியத்தில் உதவியாக இருக்கிற விமல், சந்தோஷ், உமாசங்கர், அனில்மஸி, நந்து கிஷோர், சுமன் ஆகியோருக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 17 டியோரியா

மட்டியா, பபனி, ஹர்புக், நௌதன் ஆகிய கிராமங்களிவ் புதிய ஏற்பாடுகள் கொடுத்து சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பைகுண்ட்பூர் பகுதியில் வீட்டு சபை மற்றும் பெண்கள் கூட்டம் நடத்தப்படுகிறது. மட்டியா பகுதியில் சிறுவர் மத்தியில் செய்யப்படுகிற ஊழியத்தின் வாயிலாக 25 சிறுவர்கள் வசனத்தைக் கேட்டு வருகின்றனர். ஹர்புக் கிராமத்தில் காணப்படும் சுவிசேஷ எதிர்ப்புகள் மாறவும், வசனத்தைக் கேட்டுள்ள ஜனங்கள் உள்ளத்தில் வேதவசனம் கிரியை செய்யவும், விசுவாசிகளின் பிள்ளைகளுடைய கல்வி வளர்ச்சிற்காகவும் ஜெபியுங்கள்.

போஜ்புரி II கோட்டம்

ஆகஸ்ட் 18 காஹிபூர்

மஹீனா, காஜ்ரஹி, தேவல், மௌஜ்பூர், பகோசரி, தானாடி, மார்னியா, கேஷோபூர், மோதிநகர், கர்வானியா, உஜியா ஆகிய 11 இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டன. கோஹதா என்ற புதிய கிராமத்தில் தனித்தாள் ஊழியத்தின் வாயிலாக முதன் முதலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. நீண்ட நாட்களாக தீராத வயிற்றுவலியால் பாதிக்கப்பட்டிருந்த ராம்குமார், கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த காஸ்மீராதேவி விசுவாசமுள்ள ஜெபத்தால் சுகமானார்கள். உம்ராதேவி பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலையானார். கதீர்பூர்

கிராமத்தைச் சேர்ந்த 7 வயதான அன்யாகுமாரியின் அற்புத சுகத்திற்காகவும், ராமாவதிதேவியின் குடும்ப சமாதானத்திற்காகவும், இப்பகுதி மக்களுடைய மூடப் பழக்கவழக்கங்கள் மாறும்படியாக மற்றும் வித்யாவதிக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 19 சாண்ட்

பேவார், தோவ்ஹா, பாலுஹரி, வஹ்தூரா, ஹார்பிளம்பூர், கைலானி, அக்வாடி ஆகிய 7 கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. தேல்டா, அம்பாவ், ஆகிய இடங்களில் முதன் முதலாக சுவிசேஷத்திற்கு வழி திறக்கப்பட்டது. ஆலயக் கட்டிட வேலைகள் நடைபெற்றுவருகிறது. துர்க்காதேவி பிசாசின் போராட்டத்திலிருந்து ஜெபத்தின் வாயிலாக விடுதலையார். உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த விஜயசாந்தா போதகரின் தொலைபேசி ஜெபத்தால் சுகமானார். சபையின் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிவடையவும், கீழே விழுந்து கை உடைந்துள்ள ரோஷ்மா, அடிக்கடி நெஞ்சுவலியால் கஷ்டப்படுகிற சீமா ஆகியோருடைய சுகத்திற்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 20 நௌவா

கோஹாரி, டாரிடி, ஜம்முவா, பஹசா, பபுவா, குடாசன், பஹுவான் ஆகிய இடங்களில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டியவர்கள் மத்தியில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சுவிசேஷக் கைப்பிரதிகள் மற்றும் புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டன. ஒரு வயது குழந்தை பியூஷீக்கு நீண்ட நாட்களாக காய்ச்சல் இருந்தது அந்த குழந்தைக்காக பாரத்துடன் சபையார் ஜெபித்தார்கள் தேவன் சுகம் கொடுத்தார். பிசாசின் கிரியையினால் பாதிக்கப்பட்டிருந்த கீதா இயேசுவின் நாமத்தில் ஜெபித்தபோது விடுதலையானார். அற்புதத்தைக் கண்ட அக்கிராமத்தினர் ஆச்சரியப்பட்டார்கள். உர்மிளாதேவியை பாம்பு கடித்ததினால் சரீரத்தில் காணப்படும் அலர்ஜி நீங்கவும், சாங்கூர், நௌவா ஆகிய கிராமங்களின் மக்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் ஜெபியுங்கள்,

ஆகஸ்ட் 21 ராம்நகர்

விசுவாசிகள் தங்களுடைய வீடுகளை சபைகளாக கருதி புதிய மக்களை வரவழைத்து ஜெபித்தார்கள்; ஜெபத்திற்கு வந்த புதிய மக்களுக்கு நற்செய்தி

அறிவிக்கப்பட்டது. பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 10 பேர் சபையில் ஐக்கியமாகினர். சுமன்குமாரி, சரோஜா தேவி பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலையானர்கள். பல நாட்களாக தலைவலியால் கஷ்டப்பட்ட கோத்ஸரா கிராமத்தைச் சேர்ந்த பிரியாகுமாரிக்கு தேவன் சுகம் கொடுத்தார். அன்ஷூராம் வலிப்பு வியாதி மாறவும், ராம் எக்பால் சிங் மற்றும் லக்னாகன்னி ஆகியோரது சரீர பெலவீனங்கள் மாறவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 22 பஹவான்பூர்

சுவாபெதிஹவா, ராம்கர், சரையா ஜெயத்பூர், கட்கரா, டோரி, மோகன்பூர் ஆகிய இடங்களில் வீட்டு சபை தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. வீட்டு சபையில் புதிதாகக் கலந்துகொள்ளும் மக்களுக்கு புதிய ஏற்பாடு கொடுத்து நற்செய்தி அறிக்கப்பட்டது. 200 பேருக்கு தொலைபேசி மற்றும் தனிநபர் ஊழியத்தின் வாயிலாக நற்செய்தி அறிவிக்கப்பட்டது 4 பேர் புதியதாக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். லால்பஹதுார் அவருடைய மகள் ரஞ்சுகுமாரி மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் பரம மருத்துவர் சுகம் கொடுத்தார். சாவுத்திரி பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலை பெற்றார்கள். உடல்நிலை பாதிக்கப்பட்டு படுக்கையில் உள்ள ஸ்ரீகிருஷ்ணாசிங், ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டுள்ள சேக் மற்றும் சீரம் முழுவதும் வீக்கமுள்ள சுனிதா ஆகியோரது சுகத்திற்காகவும், காஷ்மிராதேவி பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலையாகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 23 சோனகன்

8 கிராமங்களில் சுவிசேஷக் கைப்பிரதிகளின் வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. திருவசனத்திற்குக் கீழ்படிந்து 6 பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். வெள்ளிக் கிழமை தோறும் உபவாச ஜெபக் கூடுகை நடைபெற்றது. மகரமா கிராமத்திலுள்ள முன்னா பிரஜாபதி மகள் பிசாசின் போராட்டத்தால் கஷ்டப்பட்ட நிலையில் இயேசுவின் நாமத்தினால் விடுதலையானார். பெல்லாரி கிராமத்தில் சங்கீதா மோட்டார் சைக்கிளில் விபத்தில் சிக்கி தலையில் காயம் ஏற்பட்டபோதிலும் ஜீவனை தேவன் காத்தார். காவாய் கிராமத்தில் துர்காதேவிக்கு பிசாசின் போராட்டத்திலிருந்து தேவன் விடுதலை கொடுத்தார். ஒடார் கிராம மக்கள் ஆண்டவரை அறிந்து கொள்ள ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 24 கட்டாவ்

இரியா, புசௌலி, பசன்காவ், சோனாவ், பேல்மா, பபன்காவ், பஹேரா, பிட்டி பார்காபாத், பஹேனாபர்னா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பெல்மசூர் கிராமத்தில் இந்துஜா வீட்டில் ஜெபக் கூடுகை நடைபெற்றது. பார்காபாத் கிராமத்தில் சிறுவர்களுக்கு வேத வசனம் கற்றுக் கொடுக்கப்பட்டது. கோல்காஷ்ரி கிராமத்தில் பஹவான்ராம் மனைவி ஆர்த்திதேவி இருகால்களும் நடக்கமுடியாத சூழ்நிலையிலிருந்தார்; சபையார் அனைவரும் அவருக்காக பாரத்துடன் ஜெபித்தபோது தேவன் சுகத்தைக் கொடுத்தார். கொரோனா நோயினிமித்தம் பின்விளைவு பெலவீனத்தால் பாதிக்கப்பட்டுள்ள விசுவாசிகளின் சுகத்திற்காகவும், அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ள இப்பணித்தள ஊழியருடைய மனைவிக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 25 பக்ஸாடா

உசியா, குஷி, உமர்கஞ், பேராவார், நகசர், பக்சி, அமௌரா, சித்ரகாடேரா, கேஷாவ்பூர், ஜலீல்பூர் ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. பின்பூர்வா, தயான்பூர் ஆகிய புதிய கிராமங்களில் சுவிசேஷ வாசனை முதன் முதலாக வீசியது. ஞானஸ்நானத்திற்கு ஆயத்தமாக உள்ள 15 புதிய விசுவாசிகளுக்காகத் துதியுங்கள்! விசுவாசிகளுடைய வீடுகளிலும் உபவாச ஜெபக் கூடுகை நடைபெற்றது. விலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட குஞ்சா குமாரி, சீர சுகவீனப்பட்ட விமலாதேவி, தீராத வயிற்று வலியினால் கஷ்டப்பட்ட சுகன்தேவி ஆகியோருக்கு ஆண்டவர் அற்புத சுகத்தைக் கொடுத்தார். மனநிலைபாதிக்கப்பட்டுள்ள கிராமேனியா கிராமவாசியான அப்ரீன், மூளை காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள சந்திமுனிதேவியின் சுகத்திற்காகவும், திருமணமாகி 5 வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லாதிருக்கிற ரீங்குதேவியின் கர்ப்பத்தை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 26 ராவாத்திபூர்

கோபால்பூர், தில்வா, சுகல், சோன்வல், பக்டி, வேமுவா, பட்கௌலியா, மஹாதேவ், ராம்கட் ஆகிய 9 இடங்களில் தனித்தாள் ஊழியம் செய்யப்பட்டது. பித்குவா மற்றும் பக்கன்ரா கிராம விசுவாசிகள் சந்திக்கப்பட்டனர். உடல்நிலை பாதிக்கப்பட்டிருந்த கோதா என்ற கிமத்தைச் சேர்ந்த காஞ்சன் பின்மாற்றத்தில் சென்ற நிலையில் மிகவும் பிசாசினால் சோதிக்கப்பட்டு, பாடுபட்டதினால்

மீண்டும் தேவ சமுகத்தை தேடிவந்துள்ளார். வலிப்பு நோயால் பாதிக்கப்பட்ட 8 வயது சிறுவன் சபையாரின் தொடர் ஜெபத்தால் சுகமானான். வயது மூப்பு வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள கஞ்ஹர் கிராமத்தை சேர்ந்த புலா, கால்களில் காணப்படும் பெலவீனத்தால் கஷ்டப்படுகிற சிறுவர்கள் ரோஷன், அஞ்சலி ஆகியோரின் அற்புத சுகத்திற்காக ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 27 துர்க்காவதி

அசோகா, தஹியாவ், நயிபஸ்தி, அவரியா, டில்கிலி ரோஹுவா, சோஹுவா ஆகிய இடங்களில் பின்தொடர் ஊழியம் செய்யப்பட்டது. கர்ணாபூர், கல்வரியா ஆகிய இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ரோஹுவா கிராமத்தில் இரவு ஜெபம் நடைபெற்றது. தனேச்சா கிராமத்திலுள்ள முந்தைய விசுவாசிகள் முன்னாராம், சுரேந்திரராம் ஆகியோர் 8 ஆண்டுகளாக சபைக்கு வராதிருந்த நிலையில் மீண்டும் மனம்வருந்தி ஆராதனையில் கலந்துகொண்டார்கள். சந்தோஷ்ராம், சஞ்சய்ராம் தங்களின் பின்மாற்ற நிலையை மாற்றி ஆரானையில் கலந்துகொள்ள ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 28 குதுரா

திருஜ்பூர், காரதி ஆகிய கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி அறிவிக்கப்பட்டது. குல்ஹாடியா, தஹியவர், ரோஹீவா, அசோங்கா. அவாரியா ஆகிய கிராமங்களில் பின்தொடர் ஊழியம் தடையின்றி நடைபெற்றது. விசுவாசிகளுடைய வீடுகளில் வீட்டு ஜெபக் கூடுகை நடத்தப்பட்டது. பரலோகம் மகிழும்படியாக சபையில் 23 பேர் தங்களை தேவனுக்கு முழுமையாக அர்ப்பணித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். உபேந்திர ராம் மனைவிக்கு ஆண்பிள்ளையைக் கொடுத்து தேவன் ஆசீர்வதித்தார். ஞாயிறுப் பள்ளி சிறுவர்களுக்காகவும், அவர்களுடைய படிப்பு மற்றும் பாதுகாப்பிற்காகவும், தனது கணவர் இறந்த நிலையில் துக்கத்தோடு இருக்கிற தஹியாவ் கிராமத்தைச் சேர்ந்த அஞ்சுவின் ஆறுதலுக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 29 பதாவாலா

பஹேரா, நசேஜ், பதுல்யா, கங்வாலியா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து ஆர்வமுள்ளவர்களுக்கு புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டன.

மைபைதா, வகிலோகா ஆகிய 2 கிராமங்களில் தொடர் ஊழியம் செய்யப்பட்டது. சவுதானி வீட்டில் வீட்டு ஜெபக் கூடுகை நடைபெற்றது. மினுதேவி வயிற்றில் காணப்பட்ட கட்டிக்காக சபையார் ஜெபித்த ஜெபத்தைக் கேட்ட தேவன் சுகத்தைக் கொடுத்தார். பிங்கி பிசாசின் போராட்டத்திலிருந்து விடுதலையானார். சரீரத்தில் பெலவீனத்தோடு இருக்கிற தீபக் சுகத்திற்காகவும், திருமணமாகி 3 வருடங்கள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லாதிருக்கிற அஞ்சுதேவியின் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 30 பெலாவன்

பொதுமுடக்க நாட்களிலும் சில விசுவாசிகளுடைய குடும்பங்களில் ஜெபக் கூடுகைகள் நடைபெற்றது. புதிதாக சிலர் கலந்துகொண்டு விசுவாசத்தோடு ஜெபித்தார்கள். ரைடர்ஸ், ஜாலிகாங்பூர், மற்றும் பாலி ஆகிய கிராமங்களில் நற்செய்திப் பணி நடைபெற்றது. திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்ட 100 பேருக்கு நற்செய்தி வாயிலாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பிசாசின் போராட்டத்தினால் குடும்பத்தில் சமாதானத்தை இழந்திருந்த ராஜேந்திரன் என்பவருக்காக ஜெபித்தபோது அவரது குடும்பத்தைவிட்டு பிசாசின் கிரியை நீங்கியது. குடும்பமாக ஆராதனையில் கலந்து கொள்கிறார்கள். மழைக் காலத்தில் இப்பகுதியில் கொடிய வியாதிகள் பரவாமலிருக்கவும், போதைப் பழக்கத்திற்கு அடிமையான இப்பகுதி மக்களின் விடுதலைக்காகவும் ஜெபியுங்கள்.

ஆகஸ்ட் 31 சையத்ராஜா

பின்தொடர் ஊழியத்தின் வாயிலாக 75 பேருக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டன. வீட்டுக் கூட்டத்தின் வாயிலாக புதிய மக்கள் நற்செய்தி கேட்டார்கள். வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் உபவாசக் கூடுகையில் விசுவாசிகள் உற்சாகமாக கலந்துகொள்கிறார்கள். 10 நாட்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்ட சங்கர் சுகமானார். குடும்பப் பிரச்சினை காரணமாக மன அமைதி இல்லாமல் இரவு நேரங்களில் தூங்காமல் மிகவும் கஷ்டப்பட்ட டோலி இயேசுவின் நாமத்தில் விடுதலையானார். விதவையான தோராதேவியின் சீரர ஆரோக்கியத்திற்காகவும், இப்பணித்தளத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் சுவிசேஷத்தைக் கேட்டவர்கள் மனந்திரும்பவும் ஜெபியுங்கள்.

GEMS Action Centers

Chennai	No. 8, 3rd Jeevan Nagar, Adampakam, Chennai - 600088 Ph. 044-22670099
Coimbatore	No.2, Anbu Nagar, 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore - 641025 Mobile : 9344824072
Dindugal	43/20C. Samiyar Thottam, Nagal Nagar, Dindugal - 624003 Cell : 9942824035
Erode	No. 34/20, Murugesan Nagar Main Road, Kumalankuttai, Erode - 638011 Cell: 9486976202
Kodaikanal	No. 1/199-1F, Packiapuram, Kodaikanal - 624101. Cell : 9443221776
Kovilpatti	No 11, Theppakulam street, Kovilpatti - 628501, Ph. : 04632-225890, 9944755640
Marthandam	N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K. Dist., - 629165 Cell : 9788689771, 9486357950
Nazareth	No. 23, King Edward street, Nazareth - 628617, Ph. : 9442094110
Nagercoil	66-E, Bright street, Nagarcoil - 629001 Cell : 9894965520
Salem	1/40, Mugil Nagar 4th Cross, Indian Bank Colony, Narasothipatty, Salem - 636004 Cell: 9442337027
Sivakasi	3/1350/9, Sathur Road, Parraipatti, Sivakasi - 626189 Cell : 9843088840
Tuticorin	38, Sarangapani street, Tuticorin - 2, Cell : 9442210629
Tuticorin	39, Innaciyarpuram, 2 nd Street, Tuticorin - 628002 Cell : 9442166061
Vellore	Shalom Cottage, 52, Vana Nagar, Alamelumangapuram, Vellore - 632009 Cell : 9952545181

REGIONAL ACTION CENTERS

Chennai	Plot No. 19-A, 3rd street, Megala Nagar, Vengaivasal - 600073, Cell : 9444763141
Madurai	No. 3/480-1, Vivekanandar Street, Surveyor Colony, Madurai - 625007 Cell : 9442934613
Trichy	Mahanaim, 1, Abdul Gazoor Street, Kajah Nagar - 620020 Cell : 9443555577
Tirunelveli	14/109A, 10th Street, Shanthi Nagar, Palayamkottai - 627002 Cell: 9443113322

General Action Center - TamilNadu

GEMS, No. 14/1, Jeba Nagar, Vasanthapuram South, Near Vijaya Garden,
Tirunelveli - 627005 Email : nellaioffice@gemsbihar.org Mobile : 9488771655

Promotional Coordination Center - TamilNadu

No. 21, Sharon Church Street, Booman Nagar, Madurai-625018
Email : tnpromotions@gemsbihar.org Mobile : +919865583563

OTHER STATE ACTION CENTERS

Bangalore	No. B-9, Gogappa Layout, Near Railway Gate, K G Halli, A C Post, Bangalore - 560045 Tel: 9448517025
Mumbai	Gala B-47, 2nd Floor, Sharad Industrial Estate, Lake Road, Near Bhandup Police Station, Mumbai - 400 078 Cell : 9322730294, 02225949999
Pondicherry	No. 22, 2nd Floor, 2nd cross, Perumal Raja Garden, Reddiyar Palayam, (opp. SBI Bank), Pondicherry - 605010 Cell : 8521577762
Kerala	No. 4, N.V. Nagar, Peroorkada (P.O), Trivendram, Kerala - 682005 Mobile : 9486357950

GEMS National Action Center

No: 29, Church street 1st Cross, Near Simpolo Tiles shop,
Kalkere Main Road, Horamavu, Bangalore -560043
Tel: +91 9443429735 E-Mail : promotions@gemsbihar.org

நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் (பிலி. 3:12 – 14) என்ற வேத வசனத்தை மையமாகக் கொண்டு, ஜுலை 20, 21, 22 ஆகிய மூன்று நாட்கள் சிக்காரியா பணித்தளத்தில் ஜெம்ஸ் தலைவர்களுக்கான உபவாசக் கூடுகை நடைபெற்றது. சகோ. ஜாண் கிருபாகரன் (Christ for All Ministries - India) மற்றும் போதகர் ராமில்டன் (டெல்லி) ஆகியோர் இக்கூடுகையின் சிறப்புச் செய்தியாளர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

ஒவ்வொரு நாளும் காலை 5 மணிக்கு தியான வேளையுடன் தொடங்கிய கூடுகை, ஆராதனை, தேவ செய்தி மற்றும் ஜெபவேளையுடன் இரவு 9 மணிக்கு நிறைவு பெற்றது. அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்தும், தலைவர்களிடத்திலும் மற்றும் தலைமைத்துவத்தின் பணிகளிலும் பிரதிபலிக்கவேண்டிய தேவன் விரும்பும் உயர்ந்த மற்றும் சிறந்த நோக்கங்களைக் குறித்தும், தலைமைத்துவத்திலிருப்போருடைய வாழ்க்கையில் அஸ்திபாரமாக அமைந்திருக்கவேண்டிய அடிப்படைக் குணங்களைக் குறித்தும், தரிசனங்களைக் குறித்தும், தாழ்மையின் சிந்தைகளைக் குறித்தும் மற்றும் தியாகங்களைக் குறித்தும் சகோ. ஜாண் கிருபாகரன் தனது அனுபவ சாட்சியின் மூலமாகவும், பல்வேறு மிஷனரிகளின் வாழ்க்கைச் சரித்திரங்களின் வாயிலாகவும் பகிர்ந்துகொண்டார். அத்துடன், இந்திய தேசத்தின் எழுப்புதல்களுக்காக நாம் செய்யவேண்டிய கடமைகளைக் குறித்தும், உலகளவில் தரிசனத்திற்காக கர்த்தரால் உபயோகப்படுத்தப்பட்ட பல தேவ மனிதர்களைக் குறித்தும் போதகர் ராமில்டன் பகிர்ந்துகொண்டார். மேலும், இறுதிநாளன்று, உபவாசக் கூடுகையின்போது கர்த்தர் தங்களுக்கு வெளிப்படுத்தின வசனங்களையும், வருங்காலத்தைக் குறித்த காரியங்களையும் மற்றும் தரிசனங்களையும் ஜெம்ஸ் தலைவர்கள் பலர் ஒருவர் பின் ஒருவராகப் பகிர்ந்துகொண்டனர். பாடல்வேளை, ஆராதனை வேளை, ஜெபவேளை என ஒவ்வொரு பகுதியும் பங்கேற்றோரை ஒருமனதுடன் கர்த்தரை நோக்கிப் பார்க்க உதவி செய்தது. மூன்று நாட்கள் நடைபெற்ற இக்கூடுகை, 22 அன்று இரவு கர்த்தருடைய பந்தியுடன் நிறைவு பெற்றது.

2021

KEY PEOPLE
PHILIPPIANS 3:14

KEY PEOPLE
FASTING PRAYER
JULY 20-22
2021

SERVE TO LEAD
LEAD TO SERVE
KEY PEOPLE
FASTING PRAYER
SUFFERING IN MISSION

GEMS MEDIA

Transforming Nations through Media Ministry

Media Ministries

www.gemsmedia.in



(Youtube channel)

GEMS Media Online

www.youtube.com/channel/UCIrr6S1t_fAIfTILnVDyNnA



Apps

www.store.gemsmedia.in

You Can Buy Books and DVDs Online

GEMS Magazines

Prabhat - Kids (Hindi)
Yudha Dvani - Kannada
GEMS Satham - Tamil
GEMS Sabdam - Telugu
Aathmadarshan - Hindi
The CALL - English

Regd. office :

GEMS Educational Media Services

11,13th Cross Street, New Colony,
Chrompet, Chennai - 44
Ph : 044-22386031, 044-22380295

Field. office :

GEMS, Sikaria, Indrapuri - 821 308
Rohtas Dist., Bihar. Ph. : 06184 234567

(Railway station & couriers centre : Dehri-on-Sone)
Website : www.gemsbihar.org.
E-mail : gems@gemsbihar.org

if undelivered please return to

GEMS Action Center

14, Jeba Nagar,
Vasanthapuram South,
Near Vijaya Garden,
Tirunelveli - 627 005. Ph : 9488771655
E-Mail : nellaioffice@gemsbihar.org

To

....

....

....

....

Private circulation

தனிப்பிரதி ரூ. 10-
ஆண்டு சந்தா ரூ. 100-